செ.வெ.எண்.55 நாள்: 24.05.2021

## தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் ஜலலலியா மண்டபத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகளை மாண்புமிகு மீன் வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் துவக்கி வைத்தார்.

---

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் ஜலலலியா மண்டபத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன் வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்று (24.05.2021) துவக்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு மீன் வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். ஒரு வாரம் தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஊரடங்கில் பொதுமக்கள் யாரும் பாதிக்காத வகையில் சில நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்றில் இருந்து காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை காய்கறிகள் வீட்டுக்கு சென்று வழங்கும் வகையில் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிராம ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதியில் மட்டும் 108 நடாமாடும் வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனத்தில் காய்கறிகள், பழங்கள், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவை நேரடியாக பொதுமக்களின் வீட்டுக்கு சென்று விற்பனை செய்வதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் கூட்டம் கூடுவதை தவிர்க்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. காய்கறி மற்றும் பலசரக்கு பொருட்கள் தங்கள் பகுதிக்கு வேண்டும் என்றால் ஹெல்ப் லைன் எண் 9750699214, 8122257972, 04639 280224 ஆகிய எண்ணை தொடர்பு கொண்டு விபரங்களை தெரிவிக்கலாம். காய்கறிகள் அரசு நிர்ணயித்து உள்ள விலையில் விற்கப்படும். பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காய்கறி விலை பட்டியல் நடமாடும் வாகனத்தில் வைக்கப்பட்டிருக்கும். விவசாய பெருமக்கள் விவசாயம் செய்வதற்கு வசதியாக கிராம நிர்வாக அதிகாரி மூலம் அனுமதி பெற்று உரிய சான்றிதழ் அளித்து விவசாய பணிகளை தொய்வின்றி தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எந்த வகையிலும் மக்களுக்கு பாதிப்பு வரக்கூடாது,

கொரோனா தொற்று ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருந்து கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்பூரில் துவக்கி வைத்தார்கள். அதனடிப்படையில் தூத்துக்குடி மாவட்டத்திலும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. எனவே 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டு கொரோனா பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாத்து கொள்ள வேண்டும். இந்த முகாமில் இளைஞர்கள் அனைவரும் ஆர்வமாக தடுப்பூசி போட்டுக்கொண்டார்கள் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ஹர்ஷ் சிங், இ.கா.ப., திருச்செந்தூர் கோட்டாட்சியர் செல்வி.தனப்ரியா, நகராட்சி ஆணையர் திருமதி.சுகந்தி, சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.போஸ்கோ ராஜா, வட்டாட்சியர் திரு.ராமச்சந்திரன், முக்கிய பிரமுகர்கள் திரு.உமரிசங்கர், திரு.ராமஜெயம், திரு.எஸ்.ஜெ.ஜெகன், திரு.கே.எஸ்.எ.முத்துமுகமது, திரு.எஸ்.ஜெ.காதர், திரு.சுகு மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.